# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுரு] யாழ்ப்பாணம்:- நந்தன வூல ஆனிமீ கச உ வெள்ளிக்கிழமை (27 June 1952) [இல - உஉ]


# அரசுக்குரிய அங்க அமைதி

## பொய்யாமொழிப் புலவர்பொருள்

மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர்
திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் B. A.; B. L.

ஒற்று அரசன் வெற்றியடைதற்குரிய சிறந்த சாதனங்களுள் ஒன்றாகும். இவ்வொற்றரால் அரசன் தன் வினை செய்வாரையும் சுற்றத்தாரையும் பகைவரையும் அவர் அறியாதவாறு ஆராய வேண்டும்.

பார்ப்பாரும் வணிகரும் துறவிகளும் முதலியோர் வேடத்தோடு பிறர் தம்மை ஐயுறாதபடி புகுதற்கரிய இடங்களிலும் புக்கு நிகழ்வனவற்றை அறிய வல்லராய்ப் பிறர் மறையச் செய்யவனவற்றை அவர் தொடர்புடையரால் கேட்டறியத் தக்கவராய்த் தாம் அறிந்தவற்றில் ஐயப்பாடு இல்லாதவராய், ஒருகாற் பிறர் ஐயுற்றுப் பிடித்துக் கடுந்தண்டஞ்செய்யினும் தம் உண்மைநிலையை வெளியிடாதவராயுள்ளாரையே அரசன் ஒற்றராகக் கொள்ளவேண்டும்.

அரசன் இவர் ஒற்றர் என்று பிறர் அறியுமாறு ஒற்றரை ஆளுதல் ஒண்ணது; ஒற்றர்களைப் பகிரங்கமாகப் பாராட்டுதலுங் கூடாது. ஓரொற்றன் அறிந்துவந்து சொல்லிய செய்திகளை அரசன் அவனறியாதவாறு மற்றும் ஓரொற்றனால் ஒற்றியறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு ஒருவரை ஒருவர் அறியாதபடி தனித்தனி யேவப்பட்ட மூன்று ஒற்றர் ஒற்றியறிந்துவந்து சொல்லும் செய்தி ஒன்றுபட்டிருக்குமாயின் அதனை அரசன் உண்மையென்று கொள்ளலாம்.

வினையின்கண் முயலும் அரசன், தனக்குப் பல்லாற்றானும் வரும் இடுக்கண்களால் மனங்கலங்காதவனாதல் வேண்டும்; இது, அவனை வருத்தவரும் துன்பத்துக்குத் துன்பம் விளைவிப்பதாவதுடன் இவன் பகைவரால் நன்கு மதிக்கப்படுவதற்கும் ஏதுவாகும் என்கிறார்.

### அமைச்சர் இலக்கணம்

இனி அரசக்குரிய அங்கங்களின் அமைதிபற்றி இவர் கூறுவனவற்றையும் சிறிது விசாரிப்போம்.

அரசர்க்குரிய அங்கங்களுட் சிறந்த அமைச்சரை அரசரோடொக்க மதித்து, அவர் இயல்பைப் பத்து அதிகாரத்தால் விரிக்கிறார்.

சொல்வன்மையும் வினைத்திட்பமும் வினைத் தூய்மையும் வினை செயல்வகையறிவும் நற்குடிப்பிறப்பும் காமம் முதலிய குற்றங் கடிதலும் பழியஞ்சுதலும் நாணும் உடையனுப், பொருளும் படையும் வினைக்குரிய காலமும் வினைசெய்யுமாறும் செய்யும் வினையும் வாய்ப்ப எண்ணவல்லவனாய், வினைசெய்தற்கண் அசைவின்மையும் குடிகளைக் காத்தலும் நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும் முயற்சியும் திருந்த அமைந்தவனாய், வினைவக்குழிப் பகைவர்க்குத் துணையாயினாரை அவரிடத்து நின்று பிரிக்கவேண்டிற் பிரித்தலும் தம்மிடத்துள்ளாரைப் பகைவர் பிரியாமல் கொடையாலும் இன்சொல்லாலும் பேணிக்கொளலும் தம்மையும் தம்சுற்றத்தையும் விட்டு நீங்கினாரைப் பொருத்திக்கொள்ள வேண்டிற் பொருத்திக்கொள்ளலும், ஒருவினை செய்தற்குரிய நெறிகள் பல வாய்த்தோன்றின் அவற்றுள் ஆவதொன்றை ஆராய்ந்தறிதலும் அவ்வினை நன்கு முற்றும்படி சூழ்ந்து செய்தலும் சிலரைப் பிரித்தல் பொருத்தல் செய்யவேண்டுமிடத்து இவர்க்கு இதுவே செய்யத்தக்கதென்று துணிவு பிறக்கும்வகை சொல்லுதலும் பகைவர் சூழ்வனவற்றைத் தான் அறிந்து அழித்தலும் அப்பகைவர் அறியாதவாறு தான் சூழ்தலும் வல்லவனாய், உலகியலறிந்து நடப்பவனாய் உள்ளவனே அமைச்சனாக இருக்கத்தக்கவன் என்கிறார்.

மேலும், அமைச்சன் தான் நினைத்த காரியங்களைப் பிறர்கேட்பச் சொல்ல வல்லவனாகவும் தானியற்றும் செயல்கள் பலவாய வழி அவற்றுற் சோர்வில்லாதவனாகவும் அவைக்கஞ்சாதவனாகவும் இருத்தல் வேண்டும்.

முறைதவறாது இனிதாகச் சொல்லும் அமைச்சர் ஏவியவற்றை உலகு விரைந்தியற்றும் வினைத்திட்பமுடைய அமைச்சன் தான் நினைத்தவற்றை நினைத்தவாறே எளிதிற் செய்துமுடிக்க வல்லவனாவன்.

அமைச்சருள், பிரித்தலும் கூட்டலும் கருதி வேற்று வேந்தரிடைச் செல்வாரைத் தூதரென்று வழங்குவர். தூதரை வடநூலார் உத்தமர் மத்திமர் அதமர் என மூத்திறத்தராக்குவர். [உத்தமர் தாமேசொல்ல வேண்டியவற்றைச் சொல்ல வல்லவர். மத்திமர் அரசன் கூறியது கூறவல்லார். அதமர் ஓலைகொண்டு செல்வார்.] இவர், தாமே வகுத்துக் கூறுவாரும் கூறியது கூறுவாரும் என இரு திறத்தராக்குவர்.

### தலையாய தூதர்

இயற்கையறிவும் தோற்றப்பொலிவும் பலரோடும் பலகாலும் ஆராய்ப்பட்ட கல்வியும் உடையராய், வேற்றரசர்க்குப் பல காரியங்களைச் சொல்லுமிடத்து அவற்றின் செயற்கருமை தோன்றாதவாறு (எளிதாய்த் தோன்றுமாறு) காரணவகையால் தொகுத்துக் கூறுதலும் இன்னாதவற்றை இனிய சொற்களால அவர் மனமகிழுமாறு கூறுதலும் வல்லராய், தாம் வேற்று வேந்தரிடைச்சென்ற காரியம் முடிதற்கேற்ற உபாயமறிதற்குரிய நீதி நூற்கல்வியும், தாம் சென்ற கருமத்தைப் பகைவேந்தர்செவ்வியும் இடமும் அறிந்து உளங்கொளச் சொல்லும் ஆற்றலும் அவர் செயிர்த்து நோக்கின் அதற்கு அஞ்சாமையும் உடையராய் உள்ளவர், தாமே வகுத்துக்கூறும் தலையாய தூதராவர்.

பொருள் காமங்களால் தூய்மையும் தமக்கு வேற்றரசருடைய அமைச்சர் துணை[...] துணிவும் தமக்கு வேற்றரசன் செய்யும் ஏதத்துக்கு அஞ்சித் தம் வேந்தற்குத் தாழ்வரும் சொற்களை வாய்சோர்ந்தும் சொல்லாமையும் தாம் வேற்றரசரிடைச் சொல்லும் சொற்களால் தம்முயிர்க்கிறுதிநேரினும் அதற்கு அஞ்சாமையும் உடையான் கூறியது கூறுந் தூதனாவன் என்கிறார்.

இவர் அமைச்சரும் தூதரும் ஆகியவரியல்பாக விரித்தவற்றைக் கம்பர் இராமாயணத்துத் தசரதனுடைய அமைச்சரையும் அனுமனையும்பற்றிக்கூறுமவற்றால் நன்கு தெளியலாம்.

### நாட்டிலக்கணம்

இனி, அங்கங்களுள், அரசனும் அமைச்சனும் கொண்டுய்க்கப்படுவதாய் அரண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பினதான நாட்டிலக்கணமாக இவர் கூறுமவற்றையும் சிறிது நோக்குவோம்.

குன்றாத விளையுளைச் செய்வோரும் அறவோரும் கேடில்லாத செல்வரும் ஒருங்கு வாழ்வதாய், அளவிறந்த பொருளுடைமையாற் பிறநாட்டாராலும் விரும்பத்தக்கதாய், கேடில்லாததாய், மிக விளைவதாய்ப் பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஓரொருகால் தனமேல் வரினும் அவற்றைத் தாங்கவல்லதாய், அதன்மேல் தன் அரசனுக்கு இறைப்பொருள் முழுமையும் உடன்பட்டுக் கொடுப்பதாய், மிக்க பசியும் நீங்காத நோயும் அழிவு செய்யும் பகையும் இல்லாததாய், சாதிசமய வேறுபாட்டால் மாறு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

************************

## இலங்கை யாருடையது?

சென்னைத் தமிழ் வர்த்தகர் சங்க அறிக்கையொன்றில் இலங்கை இந்தியர் நிலைமையைச் சுட்டிக்காட்டி, அந்நிலைமையைத் திருத்தாதது பற்றி இலங்கை இந்திய அரசாங்கங்கள் இரண்டையுங் கண்டிக்கும் பொழுது இந்திய அரசாங்கம வேறு பல துறைகளிற் பார்க்காயிருப்பதைத் தருணமாக்கி இலங்கைஅரசாங்கம் அசட்டை செய்கிறதென்றும, இலங்கைத் தமிழர் விஷயத்தைப்பற்றி இந்திய அரசாங்கம் ஒருபோதும் பொருட்படுத்தவில்லை யென்றும் துறை கூறப்படுகின்றது.

உடல்நிலை உளநிலை ஆராய்ச்சியும் சரித்திரமும் ஐயாயிரம்ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை இந்தியருடையதாயிருந்தது என்பதை நிலைநாட்டும். 1500 ஆண்டுகளுக்கு முன்னரே சிங்களவர் இலங்கைக்கு வந்தனர். உபசாரசீலராய தமிழ்மக்கள் அவர்களை இரு கைகளையும்நீட்டி வரவேற்றனர். சிங்களவர் தோசையிற் கூடிவிட்டார்கள்தான். ஆனல் நீதிப்படியும் சட்டப் படியும் இலங்கை தமிழருடையதே [...] அவ்வுரிமை [...]ுகின்றது.

************************

### வலப்புற இருதயம்

டாக்கா வைத்தியக் கல்லூரியில் பரிசோதனைக்கு வந்த ஒரு நோயாளியின் இருதயம் வலப்புறத்திலிருக்க ஏனைய உறுப்புக்களும் ஏற்றவாறு மாறியிருந்தனவாம் உறுப்புக்களின் தொழில்களில் வித்தியாசமில்லை.

### திருக்கேதீச்சரம்

ஆனி மாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலையில் சைவப் பெரியார் உயர்திரு சு. சிவபாதசுந்தரம் அவர்கள் செய்வித்துப் பிரதிஷ்டை செய்த நடராச மூர்த்திக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும.

### பாராளுமன்ற விசேஷ உரிமை

பாராளுமன்ற விசேஷ உரிமைக்கு டக்டர் N. M பெரேரு அவர்கள பங்கம் விளைத்தாரென சேர் ஜோன் கொத்தலாவல கொண்டுவந்த பிரேரணையின் விளைவாக திரு H. S. இஸ்மாயில், திரு. C W W. கன்னங்கரா, திரு. C. P. தசில்வா, டக்டர் V. R. சொக்மன் ஆகியோர் குறித்த குற்றச்சாட்டை விசாரணை செய்யும் பொருட்டு ஏற்படுத்திய உபசபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

உ

### புலைகடிரத் தொழுமின்

திருச்சிற்றம்பலம்.

புலைசடிரத்தொழுமின்புன்சடைப்புண்ணியன்
இலைகொள்சூலப்படையனெந்தைபிரானிடம்
மலைகளுண்டுதழுவிக்குட்டியோடுழகுக்
கலைகள்பாயும்புறவிற்றண்கழுக்குன்றமே.

திருச்சிற்றம்பலம்

ஆசிரியர் அலை

# அரசாங்கப் பண விரயத்திற்கு அளவுண்டா?

## நிலைமைக் கேற்ற நிர்வாகச் செலவா?

## புறநாடுகளிற் காரியாலயங்களின் பொறுப்பு என்ன?

வரவு வந்ததும் தனி வியாபாரஞ் செய்யுந் தத்துவம் பெற்றுவொருவன் வர்த்தக நிலையப் பரிபாலனத்திலும் வேறு அவசிய மற்றவைகளிலும் வீண் செலவு செய்வானேயானல் வயது போகுமுன் 'எட்டாங்கட்டளை'ச் சட்டத்துக்குட்படுவான் என்பது அநுபவ உண்மை.

சுதந்திரம் பெற்று ஆண்டுகள் ஐந்தாகவில்லை. இலங்கை அரசாங்க நிர்வாகமோ குபேரபுரக் கொடைபோல அபாரமாயிருக்கிறது. பாராளுமன்ற இரு சபைகளும் வாளமாகப் பணத்தை விழுங்குகின்றன. உயர்தர உத்தியோகங்களுக்குத் 'திருப்தியா' என்று கேட்டுக்கொண்டு வேதனம் வேண்டியமட்டும் கொடுக்கப்படுவதும் உள்நாட்டு அரசாங்க நிர்வாகப் பணச்செலவு உச்சத்தில் நிற்பதும் அரசாங்கம் நடத்துவோரின் கவனத்தை இழுக்காதுவிடினும் பொது சனத்தின் விதியைப் பாதிக்காது விடுமா?

சனநாயக ஆட்சிபென்றும் சமூகவளர்ச்சி ஆட்சி யென்றும் சொற்றொடர்களை அடுக்கிவிடும் அரசியல் ஞானிகள் இத்தீபகத்தில் விரயமாகும் பணத்தில் என்ன விகிதம் நிர்வாக நிலைய பரிபாலனத்திற்குச் செலவாகின்றது என்று ஆராய்ந்ததுண்டா?

நூறுரூபாவேதனம் பெறும் ஒருவர் உடைக்கும் இருக்கும் இடத்தில வசதிகளுக்கும் ஆக 80 ரூபா செலவு செய்தால் அன்னவர் தாய் தந்தையர் தேடிவைத்த பொருளையும் உபயோகித்து ஈற்றிலேதடுமாற்றம் அடைவது சர்வ சாதாரணம். அதேபோல் இலங்கை அரசாங்கம்வரவுக்குமிஞ்சியசெலவைச் செய்துகொண்டு வருவதை அரசியல் ஞானம் என்று கருதி வருகின்றதுபோலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ ஆனிமூ
௧௪ உ வெள்ளிக்கிழமை


## இன்றைய சமயக்கல்வியின் இயல்பு!

இன்று மணிவாசக அடிகள் இறைவனுடன் இரண்டறக் கலந்த புனித புண்ணிய நற்றின நினைவு நாள். இன்னன பல அடியார்குருபூசைநாட்கள் உள. இவ்விதத் தெய்விகத் தன்மைவாய்ந்த நினைவு காலங்களிற் சைவ மாணவ மாணவிகளும் சைவக்கலாசாலை ஆசிரியர்களும் எவ்வித நிகழ்ச்சிகளை நடத்தவேண்டுமென்று நாம் குறிப்பிட வேண்டியதில்லை. சமயக் கல்வி முறைப்படி நடக்கும் கல்விக் கழகங்களில் இறைவழிபாடும் இறையடியார் வணக்கமும் குறைவிலாது நிகழ்வதுண்மையே. ஆனல் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சமயக்கல்வி நன்கு அமையப்பெற்றிருக்கின்றதா என்று நாம் சொல்ல முடியாது.

இலங்கையில் உள்ள சைவக்கலாசாலைகள் எண்ணுக்கணக்கிற் பல என்றே கூறலாம். பிரதானமாக வடபாகத்தில் நிறுவப்பெற்றிருக்கும் சைவக் கல்விக் கழகங்கள் சைவநெறியைப் போதனையாலும் சாதனையாலும் புகட்டி வருவார்களேயானற் சைவச்சிறூர் உய்யும் வழியறிந்து உயரிய நோக்கமும் உத்தம வாழ்வும் நடத்தப் பயிற்சி பெற்றவர்களாகிவிடுவார்களன்றோ? பாடசாலை ஆரம்பிக்கும்நேரத்திலும் விடும்பொழுதிலும் தேவார பாராயணஞ் செய்துவிட்டால் அது சமயவளர்ச்சிக்குரிய பூரணகல்வி ஆகாது!

அரசினர் சமயக் கல்விக்குப் பாடவிதானத்திற் பங்குகொடுத்திருக்கின்றூர்கள் என்பது உண்மையெனினும் சமயபாடம் எவ்வாறு பயிற்றப்படுகின்றதென்றும் மாணவ மாணவிகள் சமய நெறியே வாழ்க்கை வழி என்பதை நன்கறிந்து மனத்திற் பதிக்கக்கூடியமுறையில் சமயப் பிரசாரம் செய்யப்பெறுகின்றதா வென்றும் கல்வி அபிமானிகளும் சமய ஆர்வங்கொண்டவர்களும் தீர ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

சைவக் கல்விக் கழகங்களில் சைவ வாழ்க்கை ஆசிரியர்களாலும் மாணவ மாணவிகளாலும் வாழ்ந்து காட்டப்பெறல் வேண்டும். புனித போசனத்தின் அவசியமும் புலாலுண்ணாமையின் இன்றியமையாமையும் சைவப்பள்ளிக்கூடங்களிலேயே நன்கு விளங்கக்கூடியதாக முன்மாதிரி காட்டப்படவேண்டும்.

"மடமானி பொச்சாப்பன்
காமுகன் கள்வ
னடு நோய்ப் பிணியாள
னுறச் சினத்தன்
றடுமாறு நெஞ்சத் தவனுள்
ளிட் டெண்மர்
நெடுநூலைக் கற்கலாதார்"

என்றும்,

'ஈதலியல்பே யியல்புறக் கிளப்பிற்
பொழிப்பே யகல நுட்ப
மெச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற
நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்து
மோரையிற்
றிகழ்ந்த வறிவினன்
றெய்வந் வாழ்த்திக்
கொள்வோ னுணர்வகை
யறிந்தவன் கோள்வரக்
கொடுத்தனன் மரபெனக்
கூறினர் புலவர்".

என்று கல்விகொள்வோன் றன்மையும் ஈவோன் இயற்கையும்கூறினர் ஆன்றோர். தமிழ்ச் சால்பு, தமிழ் மரபு, தமிழ்ப் பண்பு என்ற சொற்றொடர்களைக் கிளிப்பிள்ளைபோல் மொழிந்துவிட்டாற் போதாது! தமிழ்த்தனிப்பெருமைசால் வாழ்க்கையை நடத்துதல் வேண்டும்!! அதற்கு நம் கல்விக் கழகங்களே பயிற்சிச் சாலைகளாக அமைய வேண்டும்.

சைவ வாழ்வுக்கு வழி எடுத்துக் காட்டும் நிலையம் கல்விக் கழகமாகவும், வழி காட்டுவோர் ஆசிரியர்களாகவும் இருத்தல் வேண்டும். கல்வி நிலையப் பாடப் புத்தகங்கள் சமயநெறியைத் தழுவி எழுதப்படல் வேண்டும். சமயாசாரியர்கள், அடியார்கள் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அவற்றின் முன்மாதிரிகளையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பாடங்கள் படிப்பிக்கப்பெறல் வேண்டும்.

# அரசாங்க மொழியைப்பற்றிய ஆப்த வாக்கியம்!

## சிங்களஞ் சார்பாக ஏதுக்கள் தேடுதல்!

மட்டக்களப்பிலே ஆங்கில ஆசிரியர்களுக்கு அறிவுபெருக்கும் சொற்பொழிவொன்றில் கொழும்பு அரசாங்க கல்லூரித் தலைமைப்பேராசிரியர் திரு. G. C. A. கொறேயா அவர்கள அரசாங்க மொழியாக அமைவது எது என்ற கேள்விக்குத் தமது விடையை ஏதுக்களுடன் 'வெள்ளைக் கில்லைக் கள்ளச் சிந்தை' என்றபடி கூறியிருக்கின்றூர்.

தமிழ் மக்களின் மதிவளம் வாழ்க்கைப் பண்பாடு முதலியவற்றின் ஒப்புயர்வில்லாப் பெருமையை உள்ளத்தில் உள்ளி, அவற்றுக்குத் தக வாழும் மாண்புடைய தமிழ் மக்கள் அவருடைய விடையிற் பெறப்படுவதென்ன என்பது தெளிபொருளாகக்கண்டு வேண்டியன வேண்டியவாறு புரிய முன் வருவார்களென்று நம்புகின்றோம். அவருடைய விடையை ஈண்டுக் காண்க.

### சிங்களம் அரசமொழியாதற்குச் சாதகமான ஏதுக்கள்

எங்கள் பள்ளிக்கூடங்களில் ஆங்கில மொழியின் எதிர்கால நிலைமையை உற்றுநோக்கும் பொழுது சிங்களமே அரசாங்க மொழியாவதற்குச் சாதகமாக மூன்று நியாயங்களிருக்கின்றன.

(1) தமிழும் சிங்களமும் கலந்து பேசப்படுதல். பெரும்பான்மையும் சிங்களம் பேசும் இடங்களாகிய கொழும்பு, கண்டி, காலி முதலிய இடங்களிலாகும். இந்த இடங்களிலே சட்டத்தாலன்றி வழக்கத்தாலேயே சிங்களம் உயர்ந்த இடத்தை வகிக்கும்.

(2) தமிழர் எதையும் செய்யத் துணியுந் தன்மையர்! சிங்களவர் சோம்பலானவர்கள். தமிழருக்குச் சிங்களம் படிக்க இயலும், ஆனல் சிங்களவர் தமிழைப் படியார்கள். தமிழ்ப் பெற்றூரும் மாணவரும் சிங்களம் படிக்க மிகுந்த விருப்பமுடையரா யிருந்தமையால் இப்பொழுதே யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்களில் மூன்றும் பாஷையாகச் சிங்களம் இடம்பெற்றுவிட்டது. இந்த ஊக்கம் சிங்கள மக்களில் உண்டாகவில்லை. அவர்கள் ஆங்கில அறிவுடன் இலகுவாக வாழலாம் என்பதைக் கண்டவிடத்தில் தங்கள் தாய்மொழியையே சரியாகப்படிக்கவில்லை.

இந்த நாட்டிலே சிங்களவரே பெரும்பான்மையினராகையாற் கூடிய அரசியல் ஆதிக்கத்தை 1931ம் ஆண்டு தொடக்கம் அவர்கள் அநுபவித்திருக்கிறூர்கள். சிங்களப் பெருமக்கள் தமிழ் மக்களுக்குத் தங்கள் தயாள குணத் தன்மையைக் காட்டாமல் விடவில்லை. சிறுபான்மையினராயிருந்தலினுலும் சிதறுண்டிருத்தலினுலும் தமிழர் அரசியல் அதிகாரத்தைப் பெற முடியவில்லை.

### சிங்களம் அரசமொழியாதற்குப் பாதகமான ஏதுக்கள்:

(1) முதலாவது தமிழ்மொழி வளத்தைப்பற்றிய நீதியான ஒரு பெருமை மதிவளம் படைத்த எந்த ஒரு சிறுபான்மையினரும் உடையராயிருக்கத் தக்கது.

(2) தமிழ் மக்கள் மிகச்சிறந்த இலக்கியச்செல்வமுடையர். சமஸ்கிருதத்திற் கடுத்ததாய் இந்தியாவில் தமிழ்மொழியே மிகுந்த இலக்கியத்தையுடையதென்பது பேரறிஞர் கருத்து.

### அவருடைய தீர்ப்பு

ஆனல் சிங்களமே அரசாங்க மொழி ஆவதற்கு இந்த நியாயங்கள் இடையூறாய் நிற்கமாட்டா. சிங்கள மக்கள் மிகுந்த அதிகாரத்தையுடையரா யிருக்கும் இந்த நாட்டிலே தமிழ் மொழியின் உரிமையைச் சாதிப்பது வீண். அன்றியும் தமிழ்மொழி இந்தியாவில் மதுரையிலேயுள்ள தமிழ்மொழிக் கழகங்களிலே வளருமென்பதைத் தமிழர் அறிவர். சிங்களம் வேறு யாராலும் பேசப்படாமையாலே அது கீழ்நிலைக்கு விடப்படுமாயின அழிந்தொழிந்து போகும்.

இது ஒரு தூயமனத்தர் நன்காராய்ந்து தந்த தீர்மானம். எளிவாயுடைய, அரசியல்வாதியின் அவசர மொழியல்ல. எனவே தமிழும் அரசாங்க மொழியாகுமென்பது தனிப்பெரும் பொய்யாக ஒப்புக்கொள்ளும் காலம் அண்மையில் வந்துவிட்டதென்று ஊகித்தல் பிழையாகாது. "விலத்தியல் பானீர் திரிந்தற் றூகுமாந்தர்க்—" மைடியாயாக கவின் ஏழைகள்போல் ஒரு சில பொருளாதார நன்மைகளை அரசாங்கத்திடம் பெற்றவுடன் இனி நமக்கு வேறெது வேண்டும்? இல்தன்றோ மதியுடையார்க்கு நல்வழி என்று சுதந்திர உணர்ச்சியின்றிச் சொற்பெருக்குகள் ஆற்றித் திரியும் அரசியல் வாதிகளை தமிழ்மக்களைப் புகழ்ந்தகூறும் வெறும் சொற்களைப் பெரும்பொருளாக எடுத்துக்கொண்டு "ஐக்கியம் ஒத்துழைப்பு" என்ற மயக்க மந்திரங்களால் மக்கள் மனங்களைக் கட்டித் தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் இழிவுண்டாக்க முந்துவர். மானிட வாழ்க்கையின நோக்கம் எது? என அறிந்து வாழும் தமிழ் மக்கள் இம்மாய வலையிற் சிக்குண்டு துன்புறும் நிலைமையை எம் பிற்சந்ததியாருக்கு உண்டாக்கும் முயற்சியை ஒழித்து, அறநெறி கண்டு, அவ்வழி வாழ்ந்து, இறையருள் பெற்று, இன்பம் பெறத் தகும், எழில்நெறிசுயம் தமிழன்னை எம் நாட்டிலும் வீட்டிலும் என்றும் குன்றா ஒளியுடன் நிலவ உழைப்பார்களாக.

### "இரு சகோதரர்கள்"

நிகழும் நந்தன வருஷம் ஆனித் திங்கள் ௩௧ந் தேதி (14-6-52) சனி வாரம் இரவு 8 மணிக்கு Dr. S. சுப்பிரமணியம் J. P., O. B. E. அவர்களின் ஆதரவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி நாடக சபையாரால "இரு சகோதரர்கள்" அதி விமரிசையாய் நடிக்கப் பெற்றது.

### விளையாட்டுப் போட்டி

நிகழும் ஆனி மீ (28-6-52) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள் ஆதரவின்கீழ் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெறுமென்றும் அத்தருணம் பெற்றூர் தங்கள் சுற்றத்தாருடன் வந்து மகளிரது திறமையைக் கண்ணுரக்கண்டு ஆனந்திக்கும் வண்ணம் கலலூரி அதிபர் திருமதி சரோஜினி ராவும் காரியதரிசி திருமதி ராதா சோமசுந்தரமும் அறிவிக்கின்றூர்கள்.

### 25 பதவிக்கு 500 பேர்

பகிரங்கவேலைப் பகுதி உப பார்வையாளர் (Sub Overseer P. W. D.) பதவிக்குத் தமிழ் சிங்கள சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர முடையோர் தகுதி யுடையவராக அரசாங்கத்தாரால் இப்போது கணிக்கப்படுகின்றனர்.

இக்காரணத்தால் 25 பதவிகளுக்கு 500 பேர் விண்ணப்பப்பத்திரங்கள அனுப்பியிருக்கின்றூர்களென அறிய வருகிறது.

திருத்தொண்டர் திருநாள்

# 'சிந்தை செய்வது சிவன் கழலே'

## அன்பர்க்கு ஆடையும் அமுதும் அளித்த அமர்நீதியார்

சோழ நாட்டிலே பழையாறை என்னும் ஊரிலே வைசியர் குலத்திலே பெருஞ் செல்வமுடையவராய்ச் சிவபிரானுடைய திருவடிகளையே சிந்திப்பவராய் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து அவர்களுடைய குறிப் பறிந்து, கந்தை கீழ் கோவண முதலியன கொடுப்பவராகிய அமர்நீதி நாயனர் வாழ்ந்தார்.

"சிந்தை செய்வது சிவன்கழல்
அல்லதொன் றில்லார்;
அந்தி வண்ணர்தம் அடியவர்க்
கமுதுசெய் வித்துக்
கந்தை கீளுடை கோவண
கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினுல்
வரும்பயன் கொளவார்."

அவர் திருநல்லூரிலே ஓர் திருமடங்கட்டுவித்து அதிலே தமது சுற்றத்தவர்களோடிருந்து சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து மகிழ்ந்திருந்தார்.

### இறை அருள்

ஒரு நாள் சிவபெருமான் பிரமணப்பிரமசாரி வடிவங் கொண்டு மடத்துக்குவர, நாயனர் மிக மகிழ்ந்து திருவமுது செய்யும்படி வேண்டினர். பிரமசாரியார் அதற்கிசைந்து தாம் வைத்திருந்த இரு கோவணங்களிலொன்றை வைத்திருந்து தருமபடி கொடுத்துவிட்டு ஸ்நானம்பண்ணப்போக நாயனர் கோவணத்தைச் சேமித்து வைத்தனர். அதைப் பிரமச்சாரியார் மறைத்துவிட்டு ஸ்நானம் செய்தபின் மழையால நனைந்து மடத்தை யடைந்தார். நாயனர் வைத்தவிடத்தில கோவணத்தை யெடுக்கப் போனர், காணவில்லை. எங்குந் தேடிக் காணது வருந்திப் பிரமசாரியாரைப் பொறுத்தருளும்படி வேண்டினர். அவர் கோபித்துக் கௌபீனத்தைக் கவர்ந்தாகக் குற்றஞ்சாட்டினர். அறியாது செய்த குற்றமென்று பொறுத்தருளும்படி வேண்டி அதற்குப் பதிலாகப் பட்டாடைகள திரவியங்கள் தருகிறேனென்றூர் பிரமசாரியார் சம்மதித்தார்.

### மறைந்த ஆடை

மறைத்த கோவணத்தை பொதத நிறையுடையதென்று தாம் வைத்திருந்த கோவணத்தைப் பிரமசாரியார் ஒரு தட்டிலிட நாயனர் தாம வைத்திருந்த பட்டாடை திரவியம் நூல் முதலிய எல்லாம் மற்றத் தட்டிலிட்டும் கோவணமே கூடின நிறையுளளதாய்த் தாழ்ந்தது. நாயனர் அச்சங்கொண்டு தாமும மனைவியும புத்திரனுந் தட்டிலேற அனுமதி கேட்டார. பிரமசாரியார் உடன்பட்டார். அன்பில், அடிமைப்பாட்டில் நாம பிழைத்திலமாயின் இத்தட்டு மற்றத் தட்டுடன் ஒத்து நிற்கவேண்டுமென்று சொல்லித் திருநல்லூர்ப் பெருமானை வணங்கித் திருவைந்தெழுத்தை ஓதித் தட்டிலே ஏறினர்.

"இழைத்த அன்பினில் இறைதிரு
நீறுமெய் யடிமை
பிழைத்தி லோமெனிற்
பெருந்துலை நேர்நிற்க!" என்று
மழைத்த டம்பொழில திருநல்லூர்
இறைவரை வணங்கித
தழைத்த அஞ்செழுத் தோதினர்
ஏறினர் தட்டில,

அது சமநிறையுடையதாயிற்று. இவ்வதிசயத்தைக் கண்டவர்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை அரங்கம்

**'கூட்டுறவு அல்லது ஐக்கிய வாழ்வு'**

ஆண்டில் இளைஞர் ஆனால் ஐக்கிய இயக்கப் பக்குவத்தில் வேண்டியமட்டும் மூதியர், இந்நூல் ஆசிரியர் வழக்கறிஞர் அ. அருளம்பலம் அவர்கள், எவரும் அறியாது பிறர் நல உழைப்பிற் பெரிதும் ஈடுபட்டிருக்கும் இவர் ஐக்கிய இயக்கத்தில் மிக்கதோர் ஆர்வங்கொண்டு பல்லாண்டு தொண்டாற்றி வந்ததின் பயனாகத் தாம் பெற்ற அநுபவ இன்பத்தை இவ் வையகமும் பெறல் வேண்டும் என்ற உணர்ச்சியினால் இந் நூலை இயற்றியுள்ளார்.

ஐக்கிய இயக்க ஆரம்பம், காலடைவில் அகில உலகும் அது பரம்பினமை, ஈழ நாட்டின் முன்னேர் மதிவளத்திற் கிணங்க இத்தேசத்திற் செறிந்தமை: இவை எல்லாவற்றையும் விளங்கவைக்கும் புள்ளிவிபரங்களும் புகைப் படங்களும் நன்கமைய நற்றமிழ்ச் சொற்றிறன் கொண்டு ஆசகப்பெற்ற இந்நூல் ஐக்கிய இயக்க அலுவலாளர்களுக்கும் அன்பர்களுக்கும் மாத்திரமன்று கல்விக் கழக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் பெரிதும் பயன் படக்கூடியதொன்று.

ஐக்கிய இயக்கப் பகுதியார் ஆங்கிலேயகோட்டுக் கழகச் சன்மான அழைப்புக்கிணங்க ஐரோப்பாவில் உள்ள ஐக்கிய இயக்கத்தின் நடைமுறையை அவதானித்து ஆசிரியர் அருளம்பலம் அவர்கள் ஆய்ந்த அநுபவ உண்மைகள் பல இந்நூலிற் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கது.

பொருள்நயம் சொன்னயம் அமைப்பு நயம், அச்சு நயம் ஆகியன ஒருங்கமைந்த இந்நூல் போற்றற்குரியது. எமக்கனுப்பிய பிரதிகள் அன்புடன் பெற்றும்.

---

**'சிந்தை செய்வது சிவன் கழலே'**

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

கள் போற்றினார்கள். அதிசயித்தெழுந்தார்கள். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். சிவபெருமான் உமாதேவியாருடன் இடபாரூடராய்த் தோன்றிக் காட்சி கொடுத்து அவர்கள் மூவரும் தட்டில் நின்றபடியே தட்டுவிமானமமைமையச் சிவலோகத்தையடையும் பேற்றை யீந்தருள்னர்.

## அற்புதக் குழந்தை

இந்தியாவிலே ஜபல்பூர் என்னு மிடத்தில் ஐந்தரை யாட்டைப் பாலயததாகிய ஒரு பிராமணக் குழந்தை வேதங்கள், இராமாயணம், மஹாபாரதம், பகவத்கீதை, கிறிஸ்தவ வேதம், கிரேக்க நூல்கள் ஆகியனவற்றை வாய்ப்பாடமாகச் சொல்லுகின்றார். பண்டிதர்கள் அதிசயிக்கிறார்கின்றனர். இவர் இன்னும் எழுத வாசிக்கப் பழகவில்லை.

## இரும்பு உற்பத்தி

இரத்தினபுரி அம்பலாங்கொடை, அகுறெச முதலிய இடங்களில் இரும்பு இருப்பிடங்கள் இருக்கின்றன வென்றும் இவற்றை உபயோகப்படுத்துவதற்கு ஒரு நிலையம் ருகுணவுக்கு அண்மையில் அமைக்கப்படுமென்றும் இரும்பு ஆக்கத் தொழில் 65 வருடங்களுக்குச் செய்யக்கூடிய இருப்பு இருக்கென்றும் அறியவருகிறது.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


## காரைநகர் வியாவில ஐக்கிய பண்டகசாலைச் சங்கம்

இச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற (7-6-52) சனிக்கிழமை இரவு 7 மணியளவில் சங்கத் தலைவர் ஸ்ரீமான் இ. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. ஆரம்பத்தில் தலைவர் அவர்கள் சென்ற 1943-ம் ஆண்டில் இச்சங்கமானது யுத்த காலத்தில் பொது சனங்களுக்கு ஏற்பட்ட உணவுக் கஷ்டங்களை நீக்குவதற்காக ஆரம்பிக்கப் பெற்றதும், ஆரம்ப காலத்தில் பொதுசனங்களுக்குப் பெருந்தொண்டாற்றி வந்தது மகிழ்வடையத்தக்க தென்றும் பேசினார். சென்ற பொதுக்கூட்ட வரலாறு வரவு செலவுக் கணக்கு ஆகியவை வாசிக்கப்பட்டு திருப்திகரமான முறையில் வரவு செலவு பரிசீலனை செய்யப் பெறாமையால், அங்கீகரிக்கப்பெறவில்லை. வட்டாரப் பரிசோதகர் அவர்கள் "சங்கமும் அங்கத்தவரும்" என்னும் விஷயத்திற் பேசினார். காரியமுகாமைச் சபை தெரிவு செய்யப்பெற்றதும் இரவு 10 மணியளவில் வருடாந்தப் பொதுக்கூட்டம் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவெய்தியது.

## சைவப் பிரசங்கம்

காரைநகர்- கருங்காலி ஸ்ரீ. சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் சென்ற (13.6.52) வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் ஸ்ரீமான் க. தியாகராசா அவர்கள் ஆலய வழிபாடு என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சிறந்த பிரசங்கம் செய்தனர்.

பிரசாரகர் அவர்கள் ஆலய வழிபாடு ஆணவத்தினால் மயக்கப்படும் எங்கள் மனதைப் பண்படுத்திக் கடவுள்பால் செலுத்துவதற்குச் சாதகமாயுரியது என எடுத்துரைத்து சைவசமயிகள் அத்தியாவசியம் ஆலய வழிபாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் பராபரிப்புத்தத்துவ

இல 545 G.

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் முருகேசபிள்ளை கதிரவேற்பிள்ளையின் மகள் நாகராஜேஸ்வரியின் ஆதனங்களின் தத்துவம்

மயினர்.

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் தற்போது குருநாக்கல் டக்ரர் முருகேசபிள்ளை கந்தசாமி

பெட்டிசகாரர்

எதிர்

மயினர்

1. வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் கதிரவேல்பிள்ளை மகள் நாகராஜேஸ்வரி
2. கதிரவேல்பிள்ளை மகள் செல்வகண்மணியம்மா

உத்தரவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 545 G ம் இலக்க பராபரிப்புத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டு காணி 1952ஹு ஆடிமீ 22உ செவ்வாய்க் கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை கலசம்பிட்டி பா. செ. இலா- $31\frac{7}{8}$- கலசம்பிட்டி பா. செ. இலா- $20\frac{3}{4}$- இருவகைக்கும் கூடிய பா. செ. இலா- $52\frac{5}{8}$— எல்லை கிழக்கு இளையப்பா மகன் பாக்கியத்திற்கும், தம்பிப்பிள்ளை கைம்பெண் தங்கத்திற்கும், கணபதியார் ஆறுமுகத்திற்கு முரிய வாதனங்கள் வடக்கு செல்லப்பா பெண் பாக்கியத்தினுதனமும் ஒழுங்கை முகப்பும், காலஞ்சென்ற முதலி வேலனினுாிமைக்காரினுதனமும் மேற்கு ஒழுங்கையும் வைத்திலிங்கம் மகன் விசாலாட்சிக்குரிய வாதனமும், தெற்கு ரோட்டும் செல்லப்பா பெண் பாக்கியத்தினுதனமும், இதிற் சொரியலாய் நாலிலொரு பாகம்.

1952-ம் ஆ ஆனிமீ 17-ம் திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனர்.

M. 49 27—6—52.

---

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது. எங்கள் சோதிடம்

**இவ்வாரப் பலன்கள் 29—6—52——5—7—52**

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் வியாபாரம் நிலைதளம்புமீ அநுபவமுண்டாகக்கூடும். மிகக் கவனமாயிராவிட்டால் புதுப் பகைவரை உண்டாக்கக்கூடும். வாரத்தின் இறுதி இரண்டு நாட்களும் மனத்துன்பமும் சலனமும் உண்டாகக்கூடும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

வீட்டில் மாற்றமொன்றில்இனத்தவர்கள் விருப்பத்துக்கு மாறாக நெருக்கக்கூடும். அவர்கள் விருப்பத்தை எதிர்ப்பதுகஷ்டம். செலவு அதிகரிக்கும். ஆனால் சமாளிக்கக்கூடிய காசுவரும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இந்தவாரம் குடும்பத்தவர் தொடர்பில் சந்தோஷமான நிகழ்ச்சி நிச்சயம். பகைவரை வெல்லும் மனநிலைமையுண்டாகும். ஆகையினாலே சில கண்டனத்துக்கிடமிருக்கபோதிலும் வெற்றிகரமான காலத்துக்கிடமுண்டு. வாரஇறுதியில் நண்பர் அதிக உதவிபுரிவர்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் குடும்பத்தவருட் சில சண்டைகளுக்கிடமுண்டு. புது முயற்சிகள் கவனமாகக் கையாள வேண்டும். திட்டமிட்ட முயற்சிகள் பிழைப்படுவதற்கிடமுண்டு. சக தொழிலாளர் சில புதுச் சிக்கல்களை உண்டாக்கக்கூடும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

இந்தவாரம் காத்திராத சில இலாபம் பெறக்கூடும். சென்ற வாரத்திலும் இந்தவாரம் தொழில் நிலைமைகள் இலகுவாகக் கூடும். குடும்ப சமாதானமும் போட்டியிடுவோரை வெல்லுவதும் நிச்சயம்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் சித்தி யெய்துவதற்கு மிக முயலவேண்டும். இரகசியப் பகைவரால் தொந்தரவுமுண்டாகக்கூடும். புது முயற்சிகளுக்குத் தீர்மானிக்கும் பொழுது குடும்ப எதிர்ப்புண்டாகக் கூடும்.

**துலாம் சித்திரை 3,4ம பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இன்பம் பெறத்தக்க வாரம். ஆனால் அளவு கடந்து செலவழிக்கக்கூடும். புது முயற்சிகளில் சித்தி நிச்சயம். அதே நேரத்தில் அதிக எதிர்ப்பையும் கண்டனத்தையுங் ஏற்கவேண்டி வரும். கடிதப் போக்கு வரத்துக்கு நல்ல வாரம்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

குடும்பத்தினால் தொல்லைகள் உண்டு. அவசர புத்தியில் ஒரு வேலையும் செய்யலாகாது. சுகாதாரத்தைப் பேணவும். உத்தியோக தொல்லைகளுமுண்டு.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

ஊக்கமான புது மாற்றங்களுண்டு. அநேக முயற்சிகள் இவ்வாரத்தில் சித்தியடையும். குடும்பத்தில் மகிழ்வும் பணவிருத்தியுமுண்டு.

**மகரராசி உத்தராடம் 2,3,4ப பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

ஞாயிறு காலை மனச் சாந்தக்கு இராது. வார மிகுதி வியாபாரத் துறைகளுக்கு அநுகூலமாக்கும். மன மகிழ்ச்சியும் அதனால் கடினவேலை சித்தியடைதலும் கூடும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

வார முதன்மூன்று நாட்களும் உகந்தனவல்ல. வாரமிகுதி நன்மை பயக்கும். ஆனால் இடைவிடாது ஊக்கமுடன் உழைத்தல் வேண்டும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

முக்கிய கருமங்களுக்கு வாரத்து முதன் மூன்று நாட்களையும் பயன்படுத்துதல் வேண்டும், புதன் வியாழன் ஆகிய நாட்களில் உத்தியோகத் தொல்லைகளும் தங்கமும் உண்டு. மிகுதி நாட்கள் அநுகூலமானவை.

---


**சைவ பரிபாலன சபை யாழ்ப்பாணம்**

நிகழும் நந்தன ஹு ஆனி மீ 16 உ (29—6—52)
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு

அகில மலாயா தமிழ்ப்பண்ணைத் தலைவரும்
சைவசமயப் பிரசாரகருமாகிய

**திரு. கே. இராமநாதன் செட்டியார்**
பி. ஏ., பி. எல். அவர்கள்

சைவாசிரம நாவலர் மண்டபத்தில்

**"நங்கை கேட்டாள்"**

என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்துவார்கள்

சைவாபிமானிகள் அனைவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம்,
25—6—52. M52 27.

இங்ஙனம்
கா. சண்முகம்
காரியதரிசி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசுக்குரிய அங்க அமைதி

(முதற் பக்கத் தொடர்ச்சி)

பட்டுக்கூடும் கூட்டங்களும் உடனிருந்தழிக்கும் உட்பகையும் வேந்தலைக்கும் குறும்பும் இல்லாததாய், பகைவரால் கேட்டற்யாததாய் ஒருகாற் கேடுறினும் தன் வளங் குன்றாததாய் உள்ளதே சிறந்த நாடென்கிறார்.

இத்தகைய நாட்டுக்கு வான் வறந்தகாலத்தும் வளர்தரும் திரவு கேணிகளும் ஏரிகளும் ஆறுகளும் ஆகிய நீர்வளமும், இடையிலன்றி ஒருபுடையே அரணாக அமைந்ததாய்த் தன்வளம் தருவதாய் மாரிக்கண் உண்ட நீரைக் கோடைக்கண் உமிழ்வதாய் உள்ள மலையும் வலிய அரண்களுமே உறுப்பாவன. பிணியின்மையும் செல்வமும் விளைவும் இன்பமும் காவலும் ஆகிய இவ்வைந்துமே நாட்டுக்கு அணியாவன.

ஒரு நாடு மேற்கூறிய நலமெல்லாம் உடையதாயினும் அரசன் குடிகளிடம் அன்பில்லாதிருப்பினும் குடிகள் அரசனிடத்தன்பில்லாதிருப்பினும் அந்நாடு சிறவாது என்கிறார்.

## அரண் அமைதி

இனி நாட்டுக்குரிய அரணமைதி குறித்து இவர் கூறுமவற்றையும் சிறிது விசாரிப்போம்.

அரண் நாட்டுக்கு உறுப்பாதலின் நாட்டின் செய்தி கூறிய அளவில் அடங்குமாயினும் பகைவரால் அழிவுவந்தவிடத்து நாட்டுக்கும் அரசற்கும் ஏமாதற்சிறப்புப்பற்றி அரண் பிறிதோரங்கமாகத் தனியே ஓரதிகாரத்தார் பேசப்படுகிறது.

படையெடுத்துவரும் பகையரசனைத் தடுத்து எதிரூன்றி நிற்கும் அரசற்கு அரண் சிறந்த சாதனமாகுமென்பது சொல்லாமே அமையும்.

பகைமேற் செல்லுதற்கும் தம் நிலத்துரிமை பொருள் முதலியவற்றைப் பிறர் கவராது காத்துக் கொள்ளுதற்குமேற்சென்றவிடத்து அழிவுதலைவரின் தாம் மீண்டு தம்மிடம்புக்குத் தம்மைப் பாதுகாத்துக்கோடற்கும் அரண் சிறந்த சாதனமாகும்.

நீரும், நிழலுமில்லாததாய் இயங்குதற்கு அரியதாய் உள்ள மருநிலமும், செடியும் கொடியும் பின்னிப் படர்ந்து ஊடறுத்துச் சேறற்கரிய காடும், மலையும் என்னும் இயற்கையும் செயற்கையுமாகிய இந்நான்கானும் சூழ்ந்த மதிலே அரணெனப்படும்.

பகைவரால் எணிபற்றியேறற்கரிய உயரமும் புறத்தார்க்கு அகழலாகா அடியகலமும் உள்ளிடத்தார் நின்று வினைசெய்யலாம் தலையகலமும் கற்களும் சுண்ணும்பும் செங்கல்களும் கொண்டும் செம்பு முதலிய உலோகங்களை உருக்கி வார்த்தும் செய்யப்படுதலாற் குத்தியழிக்கப்படாததிண்மையும் தன்னிடத்து அமைந்து,

‘மிளையும் கிடங்கும்
வளைவிற் பொறியும்
கரவிர லூகமும்
கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும்
பாகடு குழிசியும்
காய்பொன் னுலையம்
கல்லிடு கூடையும
தூண்டிலும் தொடக்கும்
ஆண்டலை யடுப்பும்
கவையும் கழுவும்
புதையும் புழையும்
ஐயவித் துலாமும்
கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும்
பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும்
முழுவிறற் கணையமும்
கோலுங் குந்தமும்
வேலும் பிறவும்’

என்று இத்தொடக்கத்துப் பொறிகளின் அமைதியாற் பகைவரால் கிட்டுதற்கு அருமையும் உடையதாய், வாயிலும் வழியும் ஒழிந்த இடங்கள் மலை காடு நீர்நிலை யென்றிவற்றுள் ஏற்பனவுடைமையால் பகை புகாமற் காக்கவேண்டும் இடம் சிறிதாய், அகத்தோர் பகைவரால் நலிவின்றியிருத்தற்குரிய பேரிடப்பரப்புடையதாய்த் தம் வலியைப் பெரிதாக மதித்து இதுபொழுதே அழித்தும் என்றெழுந்த பகைவர் வந்து கண்டால் அவருக்கத்தைக் கெடுப்பதாய், உணவுப் பொருள்களும் மற்றும் நுகர்தற்குரியன பலவும் நிரம்பவுடையதாய், அகத்தார்விடும் படைகள் புறத்தார்மேல் எளிதிற் சேர்தலாலும் புறத்தார் விடும் படைகள் அகத்தார்மேல எளிதிற் சேர்தலாகாமையானும் அகத்தாரது போர்நிலைக்கு எளிதாய், இன்னும் அகத்தார்க்கு வேண்டும எல்லாப்பொருளும் உள்ளே உடையதாய், புறத்தாரால் அழிவு வருங்கால் அஃதெய்தாவகை உதவிக் காக்கும் ஆற்றலும் அரசன்மாட்டு அன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் முதலிய நற்குணங்களான் மேம்பட்ட வீரரையுடையதாய், எல்லாப்பொருளும் உடைமையால் அகத்தார் புறத்தே செல்லாதபடி பகைவர் முற்றுகையிட்டும் பற்றற்கரியதாய், அகத்தார் காவல் சோர்ந்த இடங் கண்டு பகைவர் ஒருமுகமாகப் போர்புரிந்து அகத்துள்ளாரை அவர்க்குற்றுழால் பேதித்தும் கொள்ளற்கரியதாய், தம் தானைப்பெருமையால் மதில்கொள்ளுதல் சூழ்ந்து வந்த புறத்தாரையும் அகத்தார் தம் சிறுபடைகொண்டே இருந்த இடம் விட்டுப் பெயராது நிற்றலேயன்றி வெற்றிகொள்ளத் தக்கதாய், போர் தொடங்கிய அளவிலே புறத்தாரான பகைவர் கெடும்வண்ணம் அகத்தார் செய்யும் வினை வேறுபாடுகளால் வீறுபெற்றதாய் மற்றும் புறத்தார் அறியாதவாறு மதிலுட்புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கைவழி முதலியவற்றால் சிறந்ததாயுள்ளது மதிலரண்.

மதிலரண் இவை யெல்லாம் உடையதாயினும் அகத்தார்சதுரப்பாடு இலராயின் இவை மாட்சிப்படுதல் இல்லையாதலின் மதில், காக்கும் வீரரை யின்றியமையாதது என்கிறார்.

இனி நாட்டானும் அரணானும் பெரும்பாலும் ஆக்கவும் காக்கவும்படும் பொருளைச் செய்தலின் திறம்பற்றி இவர் கூறுவன வருமாறு.


ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் மதிக்கப்படுவாராகச் செய்யவல்ல பொருளினும் ஒருவர்க்குச் சிறந்தது பிறிதில்லை. அது தன்னையுடையான் நினைத்த தேசத்துச் சென்று அவன் பகையினைக் கெடுக்கத் தக்கது. அறத்தையும் இன்பத்தையும் கொடுப்பது. அதனை அறத்தாறீட்டல் வேண்டும். அரசர் தாம் குடிகள் மாட்டுச் செய்யும் அருளொடும் குடிகள் தாம் அரசர் மாட்டுச் செய்யும் அன்பொடும் வாராத பொருளீட்டம், அதனையீட்டுவாரையும கொண்டிறத்தலின் அரசன் அதனைப் பொருந்தாது கழியவிடல்வேண்டும். செந்தமிழ்

## ஆசிரியர் மாற்றம்

கற்சிகமுவ சிங்களக் கலவன் பாடசாலையிலிருந்து திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்கள் 1-7-52 தொடக்கம் கொழும்பு-றத்மலானை ஸ்ரீ கொத்தலாவல பௌத்த தமிழ் கலவன் பாடசாலையில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.


நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும. நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0
குருபஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியரட்லாக் இனம்)
M. 16. 25-4-52—25-10-52.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

"பத்திரானஸ்"
இதுவே அருந் தருணம்!

உங்கள் கண், பல் என்பனவற்றைச்
சோதிப்பிக்கத் தவறுதீர்கள்
சோதப்பித்துச் சிகிச்சை செய்தற்காகிய இந்தத் தருணத்தைத் தவற விடாதீர்கள். எங்கள் நீண்டகால அநுபவமும் சேவையும் உங்களைப் பூரண திருப்திப்படுத்தும் தற்கால சாஸ்திரீய உபகரணங்கள எங்கள் வசம் இருக்கின்றன. மேலும் எங்களிடமுள்ள அழகிய புது மாதிரியான செயற்கைப் பல்வரிசைகள் நீடித்தகாலம் நின்று பிடிக்கக்கூடியன என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றோம்.
போன் இல. 271
(கிளைத்தாபனம்)
22, கண்டிரோட், குருநாகல்.
111, முதல் டிவிஷன், மருதானை.
"பத்திரானஸ்"
தந்த நயன வைத்தியசாலை
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்
PATHIRANAS
Dental Laboratory & Optical Works
28, Main Street, Jaffna

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான ருணிமார்க் ஓடுகள் $13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday, June 27, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org